# ENTRANCE EXAMINATION, 2013

## M.Phil./Ph.D. TAMIL

[ Field of Study Code : TAMP (129) ]

*Time Allowed* : 3 hours *Maximum Marks* : 70

**மொத்தம் ஐந்து கேள்விகளுக்கு விடையிறுக்கவும்**

**கடைசிக் கேள்விக்குக் (9. 1 முதல் 14 வரை) கட்டாயம் விடையளிக்கவும்**

**எல்லாக் கேள்விகளுக்கும் ஒத்த மதிப்பெண்கள்**

1. தொல்காப்பிய இலக்கண மரபுகள் குறித்து விளக்குக.
2. இந்திய இலக்கிய அழகியல் பற்றிக் கட்டுரை எழுதுக.
3. சங்க அகப்பாடல்கள் இன்றைய நவீனத்தமிழ்க் கவிதைகளில் ஏற்படுத்திய தாக்கம் பற்றிச் சான்றுகளுடன் எடுத்துரைக்கவும்.
4. தமிழில் உள்ள பிற்கால அறநூல்கள் பற்றி விரிவாக எழுதுக. (அல்லது) அறநூல்கள் கொண்டுள்ள இலக்கியக் கொள்கைகளை விளக்குக.
5. ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தின் போக்குகளை விவரிக்க. (அல்லது) தலித் இலக்கியத்தின் இன்றைய போக்குகளை விவரிக்க.
6. தமிழில் தொடக்ககால உரைநடை இலக்கியம் தோன்றி வளர்ந்த வரலாற்றை எழுதுக. (அல்லது) தமிழ்ப்புதினங்களும் திரைப்படங்களும் குறித்து எழுதுக.
7. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளின் இன்றையச் செல்நெறிகள் குறித்துக் கட்டுரை வரைக. (அல்லது) தமிழ்ப்பழமொழிகள் குறித்துக் கட்டுரை எழுதுக.
8. ஒப்பிலக்கிய ஆய்வு அணுகுமுறைகளை விளக்குக. (அல்லது) மொழிபெயர்ப்பு இலக்கியம் திறனாய்வில் பெறும் இடத்தையும் பண்புகளையும் எடுத்துரைக்க.

9. கீழ்க்கண்டவற்றில் சரியான பதிலை விடைத்தாளில் எழுதுக.

1. 'பான், வான், வ், ப்' என்பன

அ) மெய்யெழுத்துக்கள் - ஆ) இடைச்சொற்கள்
இ) இறந்த கால இடைநிலைகள் ஈ) எதிர்கால இடைநிலைகள்

2. ' குழலினிது ' இது குறிப்பது -

அ) கருத்தாவாகுபெயர் ஆ) தானியாகுபெயர்
இ) கருவியாகுபெயர் ஈ) உவமையாகுபெயர்

3. முன்னிலை ஒருமை இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்று வருவன -

அ) நினக்கு , உனக்கு ஆ) உமக்கு , உனக்கு
இ) நின்னை , உன்னை ஈ) எங்களை , எம்மை

4. இவற்றில் எவையனைத்தும் உரிச்சொற்கள்

அ) தவ, நனி, கூர், உறு ஆ) சால, தவ, கொடு, அளி
இ) சால, தவ, தகு, மிகு ஈ) சால, தவ, அரு, தரு

5. இவற்றில் எவையனைத்தும் உவம உருபுகள் இல்லை

அ) போல,மாதிரி,சொடுப்ப,நிறைய ஆ) போல,என,கடுப்ப, பொரைய
இ) அன்ன, மான, ஏய்ப்ப, உரள ஈ) அன்ன, மான, கடுப்ப, பொரைய

6. 'உடல் மேல் --------வந்து ஒன்றுவது இயல்பே'–கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) காமம் ஆ) உணர்வு இ) உயிர் ஈ) உடல்

7. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' – முதலில் பாடியவர்

அ) ஆண்டாள் ஆ) திருமூலர் இ) மாணிக்கவாசகர் ஈ) அறிஞர் அண்ணா

8. Interpretation - இக்கலைச் சொல்லின் சரியான தமிழாக்கம்

அ) பொருள்கொள்ளல் ஆ) பொருளீட்டல்

இ) இடைப்பனுவல் ஈ) இடையீடு கொள்ளல்

9. Diglossia - இக்கலைச்சொல்லின் பொருள்

அ) இருமைநிலை ஆ) இருமடிநிலை

இ) இரட்டை வழக்கு ஈ) இரட்டைக் கிளவி

10. பின்வரும் ஆங்கிலச் சொற்களில் 'குறியீட்டியல்' என்பதன் இணை-

அ) Semantics ஆ) Pragmatism இ) Syntax ஈ) Semiotics

11. He has been sentenced to exile – இதன் மொழிபெயர்ப்பு

அ) அவன் வெளியிலிருந்து வசித்திடுமாறு கூறப்பட்டான்

ஆ) அவன் நாடுகடத்தப்படலுக்கான தண்டனை விதிக்கப்பட்டான்

இ) அவன் நாடுகடந்த நிலையில் வசித்தான்

ஈ) அவன் நாடுகடந்த நிலையில் வாசித்தான்

12. 'மரணத்தைக் கண்டு அச்சப்படுகிறேன்' – இதன் ஆங்கில மொழிநடை எது?

அ) Death is seeing me to threat ஆ) Death and me are afraid

இ) Death is afraid of me ஈ) I am afraid of death

13. பூமணி அண்மையில் எழுதிய புதினம் -

அ) பிறகு ஆ) அஞ்ஞாடி இ) வெக்கை ஈ) நைவேத்யம்

14. 'காவல்கோட்டம்' புதினம் அடியொற்றிய தமிழ்த்திரைப்படம்

அ) பிதாமகன் ஆ) தென்மேற்குப்பருவக்காற்று

இ) அரவான் ஈ)நான்கடவுள்

★ ★ ★